Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 308/2020 Date: 03.07.2025
Deposition of witness for prosecution: PW3 ( LW6)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. மணிகண்டன் | Village | கூடலூர் |
| Father/ Husband Name | கல்யாணி தேவர் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 41 /2025 | Calling | கடை வைத்துள்ளேன். |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 03.07.2025 TIME 02.25 **PM**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

ஆஜர் எதிரிகளை தெரியாது. நடந்த விபரம் எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான்சுமார் 40 வருடங்களாக கூடலூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரும் எனக்கு நன்றாக தெரிந்தவர்கள் என்றாலும், கூடலூரைச் சேர்ந்தவர்கள் என்றாலும் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம்அளிக்கிறே என்றால் சரியல்ல. கடந்த 27.03.2019–ம் தேதி நள்ளிரவு 12.30 மணிக்கு நான் கூடலூர்– குமுளி மெயின் ரோட்டில் மந்தை வாய்க்கால் அருகே உள்ள எனது பழக்கடையில் இருந்த போது உத்தமபாளையம் குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறை போலிசார் எனது கடை அருகே வாகன தணிக்கை செய்தார்கள் என்றும், அப்பாது குமுளியை நோக்கி வந்த 2 கூடாரம் மாட்டு வண்டியை நிறுத்தி சோதனை செய்த போத அதில் சுமார் 50 கிலோ பிடிக்கக்கூடிய 12 பிளாஸ்டிக் சிப்பங்களில் 600 கிலோ ரேசன் பச்சரிசி இருந்தது என்றும், மற்றொரு வண்டியில் சுமார் 50 கிலோ பிடிக்கக்கூடிய 9 பிளாஸ்டிக் சிப்பங்களில் 438 கிலோ ரேசன் புழுங்கல் அரிசி இருந்தது என்றும், அந்த மாட்டு வண்டிகளை ஓட்டி வந்த ஓட்நர்கள் ராஜாங்கம் மற்றும் அஜித்குமார் ஆவார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஓம்/திரு.P.காமராசு
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 308/2020 Date: 03.07.2025
Deposition of witness for prosecution: PW4 ( LW7)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. செல்வம் | Village | கூடலூர் |
| Father/ Husband Name | கழுவத்தேவர் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 55 /2025 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 03.07.2025 TIME 02.30 **PM**

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

என்னிடம் காட்டப்படும் 1–வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும், சுமார் 50 கிலே பிடிக்ககூடிய பிளாஸ்டிக் பையில் 30 கிலோ ரேசன் அரிசியை கைப்பற்றிய அத்தாட்சியிலும், உள்ள 1–வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 1–வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும், சுமார் 50 கிலே பிடிக்ககூடிய பிளாஸ்டிக் பையில் 30 கிலோ ரேசன் அரிசியை கைப்பற்றிய அத்தாட்சியிலும், உள்ள 1–வது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.5, 6** ஆகும். எனது வீட்டிற்கு பின்னால் வைத்து போலிசார் 1–வது எதிரியை தெரியுமா என கேட்டு, தெரியும் என்று சொன்னதால் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். வழக்கு விபரம் எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சுமார் 40 வருடங்களாக கூடலூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரும் எனக்கு நன்றாக தெரிந்தவர்கள் என்றாலும், கூடலூரைச் சேர்ந்தவர்கள் என்றாலும் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம்அளிக்கிறே என்றால் சரியல்ல. கடந்த 28.03.2019–ம் தேதி காலை 06.30 மணிக்கு நான் கூடலூர்– அரசமரத்து பஸ் ஸ்டாப் அருகே உள்ள டீ கடையில் இருந்த போது, உத்தமபாளையம் குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறை போலிசார் அந்த இடத்தில் எங்கள் ஊரைச்சேர்ந்த ராஜேந்திரன் என்ற வெள்ளை மண்டை ராஜேந்திரனை விசாரணை செய்ய சாட்சியாக இருக்கும் படி கேட்டார்கள் என்றும், என் முன்னிலையிலும் போலிஸ் அருள்ராஜ் முன்னிலையிலும் மேற்படி ராஜேந்திரன் எவ்வித அச்சுறுத்தலோ, மிரட்டலோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அதில் சாட்சியாக நாங்கள் கையொப்பம் செய்தோம் என்றும், அதன் பின்பு மேற்படி ராஜேந்திரன் வீட்டில் இருந்து வெள்ளை சாக்கு பையில் சுமார் 30 கிலோ ரேசன் அரிசியை இருந்ததை எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், போலிஸ் விசாரணையில்

சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஓம்/திரு.P.காமராசு
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.